1971 அக்டோபர் 22]

அதற்காக, பாராளுமன்ற உறுப்பினர்களை நல்ல முறையில் வற்புறுத்தி, எந்த தேர்தலாக இருந்தாலும் கொள்கை அடிப்படையில் யார் உறுப்பினர்களாக வருகிறார்களோ, அவர்கள் அந்தக் கட்சிக்கு விச்வாசமாக இல்லாமல், மந்திரி ஆவதற்காகவோ, அல்லது வேறு காரணத்திற்காகவோ, கட்சி மாறினால், அப்படிப் பட்ட உறுப்பினர்களை திரும்பிப் பெற அந்தத் தொகுதி மக்களுக்கு வாய்ப்பு ஏற்படுவதாக இல்லாமல், மந்திரி ஆவதற் ம்ளு வாய்ப்பு ஏற்படுவதாக இருந்தால்தான் அதற்கு ஒரு நீண்டகால பரிகாரம் கிடைக்கும். தற்போதைய நிலைமையைப் பொறுத்த வரையில், இது ஒரு பங்காளிச் சண்டை. பெயரிலே ஒன்றுமே இல்லை. இதில் பல மாதிரியான குழப்பங்கள் இருக்கின்ற காரணத்தால்—அந்தக் குழப்பங்கள் வெளியில் வேண்டுமானால் இருக்கட்டும்—இம் மன்றத்தைப் பொறுத்தவரையில், இந்தச் சங்கடம் இல்லாமல் இருப்பதற்கு எல்லோருக்கும் அனுகூலமாக இருக்கும் வகையில், திரு. காசிராமன் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து, நேற்றைய விவாதத்தைத் தொடருவோம். திரு. ஹாண்டே அவர்களுக்கு பத்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்குள் தம் உரையை முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: With your permission may I take it that it is a defection that has ben made by the hon. Member. Is it a defection or some other thing that has been made?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது இங்கே மட்டுமல்ல. பொதுவாக அரசியலில் இருக்கிறது. வெளியிடங்களில் இருக்கிறது. இது எல்லாக் கட்சிகளுக்குமுள்ள ஒரு கோளாறு. இதற்கு திரு. காசிராமன் மட்டும் பொறுப்பாளி அல்ல. ஒருவர் ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு போகிறார் என்றால், எந்தக் கட்சியில் அவர் சேர்ந்தாரோ, அந்தக் கட்சிக்காரர்கள் சந்தோஷப்படுகிறார்கள். நான் சார்ந்திருக்கிற கட்சியில் கூட யாராவது சேர்ந்தால் சந்தோஷப்படுகிறோம். எங்கள் கட்சியிலிருந்து யாராவது காங்கிரசுக்குச் செல்கிறார் என்றால் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள், என்று சொல்கிற போது, இது இன்றைய அரசியலில் ஏற்பட்டுள்ள நிலைமை. எனவே, இதற்கு எல்லோரும் சேர்ந்து பரிகாரம் தேட வேண்டும். இது தனிச் சம்பவத்தின் குறைபாடு என்று நான் கருதவில்லை.

(3) நடைமுறைக் கேள்வி

பேரவைத் தலைவர் தான் ஒரு கட்சியைச் சார்ந்தவர் என்று குறிப்பிட்டது குறித்து.

THIURMATHI T. N. ANANDANAYAKI: On a point of order, Sir, when once an hon. Member is elected as Speaker, he need not join any party or owe allegiance to any party. But today the Hon. Speaker was referring time and again.

" நான் சார்ந்த கட்சி, நான் சார்ந்த கட்சி ", என்று ஒரு பேரவைத் தலைவர் இதுமாதிரி சொல்லலாமா? இது கன்வென்ஷனுக்கு புறம் பாகாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். நான் இப்போது தெளிவாகச் கூறுகிறேன். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் என்று இருக்கிறேனே தவிர, நான் சார்ந்துள்ள கட்சி தி.மு.க. தான் என்று இன்றைக்கும் சொல்கிறேன். தி.மு.க. கட்சியிலே மற்றவர்களுக்கெல்லாம் என்னென்ன பாத்தியதைகள் இருக்கின்றனவோ, அந்த பாத்தியதைகள் எனக்கும் இருக்கின்றன. அவைகளை மறைத்துக்கொண்டு நான் இங்கே இருக்க விரும்பவில்லை. இங்கே இருக்கிற நேரத்தில் சபாநாயகர் என்ற கடமைகளிலே நான் பாரபட்சம் இல்லாமல் இருக்கிறேனே தவிர மற்றபடி நான் தி.மு.க. கட்சி தான். இதைச் சொல்வதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்த உறுப்பினருக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். "ஐ கண்டின்யூ டுபி எ மெம்பர்". பல கட்சிகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் அவையில் நடக்கவேண்டும் என்றுதான் இருக்கிறேனே தவிர இது துறவறம் அல்ல. கொள்கைகள் கிடையாது என்று அல்ல. இந்த அவையில் உள்ள எல்லோரும் சேர்ந்து என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், என்ற காரணத்தால் இங்கே உட்கார்ந்திருக்கிறேன். எனவே, நான் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன்தான் என்பதை மீண்டும் நல்ல முறையில் பிரகடனப் படுத்திக்கொள்கிறேன். இப்போது டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுவார்கள்.

(4) அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி.

1971-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (24-வது திருத்த) மசோதாவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்தல் — (தொடர்ச்சி)

DR. H. V. HANDE : Hon. Speaker Sir, yesterday I was referring to certain points when hon. Members from that side asked me a question whether I was referring to Parliament or Prime Minister. I would like to stress the fact that whether it is Parliament or Prime Minister once the decision has been given by the people, it is the leader of that particular party, the Prime Minister of India who takes the the decision and therefore I can tell my hon. Members that ultimately it is the Prime Minister and not Parliament (even though it is Parliament directly, it is Prime Miniter indirectly) who takes the decision.